


**ஏன் 1?**

மண் திரைப்பட இயக்குநர் புதியவன், இப்படத்தை றொறன்ரோ திரையரங்கில் கடந்த வருட பிற் பகுதியில் திரையிடத் திட்டமிட்டிருந்தார். பின்பு அவரது குடும்பத்தில் இடம்பெற்ற துயரச் சம்பவம் ஒன்றினால், இதனை இவ்வருட முற்பகுதிக்கு ஒத்திவைத்திருந்தார். ஆனால் றொறன்ரோ தமிழ் கள்ளச்சந்தையின் ஊடாக இப்படம் றொறன்ரோ தமிழ்க் கடைகளில் கிடைக் கின்றது. இக்கள்ளச் சந்தையில் 'ஆணி வேர்' படத்தையோ அல்லது In the name of Buddha வையோ பெறமுடியாது.

**ஏன் 2?**

புதியவன் இப்படத்தை தன்னுடைய சொந்த ஊரான கனகராயன் குளத்தில் காட்சிப்படுத்த விரும்பினார். ஆனால் விடுதலைப்புலிகள் அனுமதி கொடுக்க மறுத்ததனால் புத்தளம் பகுதிகளில் படமாக்க வேண்டி ஏற்பட்டது.

'ஆணி வேர்' படத்திற்கு ஏன் இந்த விதிவிலக்கு?

**ஏன் 3?**

மலையக மக்கள் பற்றிய பதிவு ஒன்றை, கனகராயன் குளத்தில் பதிவு செய்ய மறுத்ததன் மூலம் தமிழ்த் தேசிய எல்லைகள் தெளிவு படுத்தப்பட்டிருக்கின்றன.

புதியவன் ஏற்கனவே 'மாற்று', 'கனவுகள் நிஜ மானால்' ஆகிய இரு குறும்படங்களை நெறியாள்கை செய்துள்ளார். மாற்று படத்தில் லண்டனில் வாழும் மனநோயாளி மணமகனிற்கு, இலங்கையில் இருந்து ஒரு பெண் திருமணத்திற்காகக் கொண்டு வரப் படுகிறாள். அப்பெண்ணிற்கு மணமகனின் நிலைபற்றி எதுவும் தெரியாது. ஆனால் அவள் மணமகனுடன் வாழ நிர்ப்பந்திக்கப்படுகிறாள்.

'கனவுகள் நிஜமானால்' படமானது புலம்பெயர் பெற்றோர்கள் மீதான ஒருவகை விமர்சனமாக அமைகின்றது.

**மண்**

பிழைப்பிற்காக கனகராயன் குளம் வரும் மலையகக் குடும்பம் ஒன்று பல இன்னல்களையும், அவமானங் களையும் சந்திக்கின்றது. அவர்களின் மகள் லக்ஷ்மிக்கும் உயர்சாதியைச் சேர்ந்தவன் எனப் படுகின்ற பொன்ராசுவிற்கும் காதல் ஏற்படுகின்றது. இறுதியில் தன்னுடைய பெற்றோரின் விருப்பிற்கு ஏற்ப பொன்ராசு இங்கிலாந்து சென்று விடுகின்றான். சுமார் 18 வருடங்கள் கழித்து போரை விபரணமாகப் பதிவு செய்யும் நோக்குடன் கனகராயன் குளம் வருகின்றான் பொன்ராசு. அவன் வரும்போது லக்ஷ்மி இறந்து விட்டாள். தனது தாய்க்குச் செய்த கொடுமைக்காக அவர்களுடைய மகன் அவனைச் சுட்டுக் கொன்று விடுகின்றான்.

இத்திரைப்படம் புலம்பெயர், இலங்கைத் தமிழ்த் திரைப்பட மொழியைக் கொண்டிருக்கத் தவறிவிட்டது என்றுதான் சொல்லவேண்டும். இந்திய வர்த்தக சினிமாவுடன் சமரசம் செய்தமை வருந்தத்தக்கது. வகுப்பறைக் காட்சிகள் இந்திய அரைகுறைத் தமிழ் சினிமாவையே நினைவுபடுத்துகின்றன.

திரைக்கதையின் நேர்த்தியின்மை பல கேள்வி களை எழுப்புகின்றது. உதாரணத்திற்கு, 18 வருடம் கழித்து தனது மண்ணிற்கு வருபருக்கு அங்கு இதுவரை காலம் என்ன நடந்துள்ளதென அறியாமல் வருவது ஆச்சரியம். அதுவும் விடுதலைப்புலிகளின் கட்டுப் பாட்டில் உள்ள பகுதிக்கு விபரணம் ஒன்றை பதிவ தற்காக எந்தவித விசாரணையும் இன்றி வருவது ஆச்சரியமே.

தனது சொந்த உறவைத் தவிர்த்து பொன்ராசுவுடன் லக்ஷ்மிக்கு ஏற்படும் காதல் யதார்த்தமானதே. ஆனால் இவர்கள் இருவரும் உடலுறவு கொண்ட பின்னர், லக்ஷ்மிக்கு தனது குடும்பம் எதிர் நோக்கும் பிரச்சி னைகள், துயரங்கள் தெரிந்தும் இதனைச் சாதார ணமாக எடுத்துக்கொள்வது ஆச்சரியமாகவுள்ளது.

பொன்ராசு தப்பிச் செல்வது, பொதுவாக உயர்சாதி எனப்படுபவரிடையே நடைபெறுவது. ஆரம்பத்தில் உணர்வுடனும், உரிமையுடனும் பழகும் இவர்கள், பின்னால் நழுவுவதில் கெட்டிக்காரர்கள். இந்தத் தப்பித்தல் குணாம்சம் சிறப்பாக பதியப்பட்டுள்ளது.

உயர்சாதி எனப்படுபவர்கள் மற்றும் மலையக மக்களது சமூகப் பின்தளம் யதார்த்தமாக படைக்கப் பட்டுள்ளது. சமூக யதார்த்தத்தை வர்க்கரீதியாக விமர்சிக்க முற்படுகின்றார் புதியவன்.

இப்படத்தில் தமிழகக் கலைஞர்களுடன், எமது கலைஞர்களும் பங்குபற்றியுள்ளனர். கதாநாயகன், கதாநாயகி இருவரும் இலங்கையர்களே. இசை ஜேர்மனி விஜய். துணை இயக்கம் உட்பட, பல சிங்கள தொழில்நுட்பவியலாளர்களும் இதில் கடமையாற்றி யுள்ளார்கள். ஒளிப்பதிவு, எடிட்டிங் என்பவற்றை முறையே சி. ஜே. ராஜ்குமார், சுரேஸ் அர்ஸ் ஆகியோர் செய்துள்ளனர். இப்படத்தின் சிறப்பம்சம் ஒளிப்பதிவே. தெளிவான, காலமாறுதலுக்கு நிற வேறுபாடு என சிறப்பாக பதியப்பட்டுள்ளது. - (பிரசன்ன விதானகே போரின் உக்கிரத்தை காட்ட கடும் மஞ்சள் நிற ஒளி-மத்தியான வெயிலை தனது படங்களில் காட்டியுள்ளார்)- டப்பிங் திருப்தியானதாக இல்லை.

இனி, படத்தின் மிக முக்கிய கருவிற்கு வருவோம். இப்படம் மலையக மக்களை. உயர்சாதி எனப்படு கின்றவர்கள் ஆண்டாண்டு காலமாக ஒடுக்கும் வன்முறைகள், அட்டூழியங்களை மையப்படுத்தியுள்ளது. போர்ச்சூழலில் குண்டுகளை தவிர்த்து, மேற்தட்டு வர்க்கமானது சாதியைக் குண்டாக பாவித்த, மலையக மக்களின் பதிவை முன்னிலைப்படுத்தியுள்ளார். படத்தின் இறுதியில் ஏமாற்றியவனை சுட்டுக் கொன்ற பின்னர், திரையில் எழுந்துள்ள வாசகங்கள் " கும்பிட மட்டுமே கைகள் தூக்கிய கூட்டத்தின் நடுவே, துப்பாக்கி தூக்கிய இவன் கரங்கள்".

துப்பாக்கிகள் மலிந்துள்ள கலாச்சாரத்தில், ஒரு சமூக ஒடுக்கு முறைக்குத் தீர்வு துப்பாக்கி தானா எனக் கேள்வி எழுவது நியாயம். இது ஒரு புற நிலைத் தீர்வே. இந்த ஒரு வேட்டுடன் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு கிடையாது.

எத்தனை ஆயிரம் சூடுகள், கொலைகள். இழப் புக்கள், அதனால் தமிழீழம் கிடைத்து விட்டதா? இந்தச் சூடு சமூகத்தின்மீது வைக்கப்பட்டுள்ள விமர்சனம் எனவும் கருதமுடியாது. அப்படிக் கருதின் அது சமூகப் புரட்சியின் மீது நம்பிக்கையற்ற தன்மை யையே காட்டும். தனிமனிதக் கொலைகள் ஒரு பொழு தும் சமூக-அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வாகாது.

உயர்சாதி ஒழுக்க நெறிகள் குற்றம் புரிதலையும், அதற்கான காரணங்களையும் சமூக ஒழுக்கமாக, நெறிகளாக கொள்பவை. சமூக இயந்திரங்களை (மதம், கலாச்சாரம், அரசியல் போன்றவை) இந்த ஒழுக்க நெறிகள் மூலமாகவே இயக்குகின்றன. எமக்கு சாதகமானவற்றை அல்லது சார்ந்திருப்பவற்றை ஏற்றுக் கொள்கின்றோம். ஏனையவற்றை நிராகரிக் கின்றோம். எமது புதிய சந்ததியும் இந்த ஒழுக்க நெறிகளையே தொடர்கின்றன.

சிங்களவரின் அடிமைத்தனத்துக்கு எதிராகக் குரல் உயர்த்திய அரசியல்வாதிகள், தங்களது சமூகம் அடிமைகளாக, எந்தவித அடிப்படை வசதியும் (பழஞ் சோறு, கல்வி மறுப்பு, நீண்ட நேர உழைப்பு, பாலியல் கொடுமை) அற்று தாங்கள் ஒடுக்கிய மக்களை கவனிக்கத் தவறி விட்டார்கள். (அவர்களது குடியு ரிமைக்கு எதிராக வாக்களித்தவர்களாயிற்றே)

"கும்பிட மட்டுமே தூக்கிய கைகள்" இது புதியவனின் இறுதி வரிகள். புதியவன் மலையக சமூகச் சார்பாக இப்படத்தை படைக்க முடியாது. புதியவன் ஓர் பார்வையாளனாக அல்லது அச்சமூகத்துடன் நெருக்கமானவன் என்ற ரீதியிலேயே படைக்கலாம்.

புதியவன் இந்தச் சமூகம்மீது கொண்டுள்ள அக்கறையும் தன் சமூகம் மீது கொண்டுள்ள கோபமும் பாராட்டத்தக்கது. ஆனால், தனது முடிவை அங்கு திணிப்பது தீர்வாகாது. குறிப்பாக, அச் சமூகத்தைச் சேர்ந்த மகனே கொலை செய்வது, அரசியல் பேச்சில் 'ராஜ தந்திர' தீர்வாகும். ஆனால், இந்த மலையக மக்கள் மீதான வன்முறைக்கு இன்றுவரை நாம் வருந்தியது கிடையாது. இன்றுவரை அரசியல் தீர்வை முன் வைக்கவில்லை.(எழுத்தில் கூட)

அந்த மனோபாவம் இருப்பின் முஸ்லீம் மக்களை வெளியேற்றியிருப்போமா?

புதியவனின் தீர்வு கொலை எனின், புதியவன்கூட வன்முறை, கொலை தீர்வை ஏற்றுக்கொள்கின்றாரா?

'ஆணி வேர்' வெளிவந்த காலகட்டத்தில் வெளி வந்துள்ள இப்படம் இருபத்திஜந்து வருடங் களின் பின்னர் திரைப்பட ஒளிப்பதிவுக் கமாராவால் எடுக்கப்பட்டுள்ள படம் என்ற நிறைவைத் தருகின்றது.

1/7/2007 11:27:18 PM

http://www.nowrunning.com/film/slideshow1.asp?movieNo=3572
http://www.kollywoodtoday.com/gallery/search.php?search_keywords=puthiyavan&sessionid=ffd96f65f546a04264089a3ab5ce0b82
http://movieearth-ha.blogspot.com/2006/11/r_116416344129788174.html
http://www.123srilanka.com/news/directory.php?id=871